729-

**அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017-18 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை**

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன் படி அரியலூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.எண்:403/பு(ம)சு/2017, நாள்:02.02.2018-ன் படி அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது 25.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண்:9/2017/Book IV நாள்:26.09.2017–ன்படி அரியலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண்: | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சிதலைவர், அரியலூர் | 1. | மாவட்ட ஆட்சிதலைவர், அரியலூர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், அரியலூர் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், அரியலூர் |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அரியலூர் | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, அரியலூர் |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர் |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், அரியலூர் | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(ஊரக வளர்ச்சி), அரியலூர். |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், அரியலூர் | 6. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), அரியலூர் |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், அரியலூர் | 7. | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், அரியலூர் |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், அரியலூர் | 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், அரியலூர் |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), அரியலூர் | 9. | மாவட்ட வன அலுவலர், அரியலூர் |
| 10. | குடந்தை சேவா சங்கம், காது கேளாத இளம் சிறார்களுக்கான முன் பருவக் கல்வி மற்றும் பயிற்சி மையம், அரியலூர் | 10. | செயற்பொறியாளர், பொ.ப.து(நீர் வள ஆதார துறை), அரியலூர் |
| 11. | திரு.A.R..அக்பர் செரிப் த/பெ திரு.அப்துல் ரசாக், எண்.6, தாண்டவராய தெரு, அரியலூர் | | உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, அரியலூர் |

| | | | |
|---|---|---|---|
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், அரியலூர் |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், அரியலூர் |
| | | 14. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், அரியலூர் |
| | | 15. | வருவாய் கோட்ட அலுவலர், உடையார்பாளையம் |
| | | 16. | வருவாய் கோட்ட அலுவலர், அரியலூர் |

அரியலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, அரியலூர் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்:6570250548) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு கொண்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் எழுபத்தி மூன்று பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 12 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பில் உள்ளது. அவற்றில 61 பெருங்கனிம உரிமங்கள் 12.01.2015-க்கு முன்னர் வழகங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மீதமுள்ள 12 பெரு கனிம சுரங்கக்களுக்கு 10% கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 8 தீக்களிமண் மற்றும் 4 கிராவல் சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் தற்பொழுது இயங்கி வரும் 3 கிராவல் குவாரிகளுக்கு 10% தொகையம் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் இது வரை 59 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2018 வரை ரூ.77,27,43,981/- (ரூபாய் எழுபத்தி ஏழு கோடியே இருபத்தி ஏழு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஒன்று மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் நிதியாண்டில் அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு தலைவர், அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு

அறக்கட்டளை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்:403/பு(ம)சு/2017, நாள்: 13.02.2018-ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கட்டு கீழ்கண்ட உபகரணங்கள் வாங்கப்பட்டது.

| வ.எண் | உபகரணத்தின் பெயர் | தொகை(ரூ) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமை/பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | ஸ்கேன் | 9,10,000 | இணை இயக்குநர்(பொ), சுகாதர பணிகள், பெரம்பலூர் | உயர் முன்னுரிமை திட்டம் |
| 2. | டாப்ளர் | 2,90,000 | இணை இயக்குநர்(பொ), சுகாதர பணிகள், பெரம்பலூர் | உயர் முன்னுரிமை திட்டம் |
| 3. | ஸ்டீம் ஜெனரேட்டர் | 59,360 | இணை இயக்குநர்(பொ), சுகாதர பணிகள், பெரம்பலூர் | உயர் முன்னுரிமை திட்டம் |
| | மொத்தம் | 12,59,360 | | |

மேற்கண்ட திட்டங்கள் குறித்து தணிக்கை செய்வதற்கு கணக்காயர் நியமிக்கப்பட்ட பிறகு தணிக்கை செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தலைவர்,
அரியலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர்,
அரியலூர்.